# மே – 25 – சனி

**“உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்குமுன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்” யோவா 15:18**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி16 : 1 - 10

அந்நாட்களில் பவுல் தெருபை, லிஸ்திரா ஆகிய நகர்களை வந்தடைந்தார். லிஸ்திராவில் திமொத்தேயு என்னும் பெயருள்ள சீடர் ஒருவர் இருந்தார். அவருடைய தாய் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட ஒரு யூதப்பெண். தந்தையோ கிரேக்கர்.திமோத்தேயு லிஸ்திராவிலும், இக்கோனியாவிலுமுள்ள சகோதரர் சகோதரிகளிடையே நற்சான்று பெற்றவர்.பவுல் அவரைத் தம்முடன் கூட்டிச்செல்ல விரும்பினார். அவ்விடங்களிலுள்ள யூதரின் பொருட்டு அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார். ஏனெனில் அனைவரும் அவருடைய தந்தை கிரேக்கர் என்று அறிந்திருந்தனர்.அவர்கள் நகர் நகராகச் சென்றபோது எருசலேமிலுள்ள மூப்பரும் திருத்தூதரும் செய்த தீர்மானங்களை அவர்களிடம் கொடுத்துக் கடைப்பிடிக்குமாறு கூறினார்.இவ்வாறு திருச்சபைகள் நம்பிக்கையில் உறுதி பெற்று நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகிவந்தன.பின்பு ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்கவே, அவர்கள் பிரிகிய, கலாத்தியப் பகுதிகளைக் கடந்து சென்றனர்.அவர்கள் மீசியா அருகே வந்து பித்தினியாவுக்குச் செல்ல முயன்றபோது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்கு போகவிடவில்லை.எனவே அவாகள் மீசியா வழியாகச் சென்று துரோவா நகரை அடைந்தனர்.பவுல் அங்கு இரவில் ஒரு காட்சி கண்டார். அதில் மாசிதோனியர் ஒருவர் வந்து நின்று, ”நீர் மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்” என்று வேண்டினார்.இக்காட்சியைப் பவுல் கண்டதும், நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி, அங்குச் செல்ல வழி தேடினோம்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்

## நற்செய்தி : யோவான் 15 : 18 – 21

அக்காலத்தில் இயேசுதம் சீடரை நோக்கிக் கூறியது : ”உலகு உங்களை வெறுக்கிறதென்றால் அது உங்களை வெறுக்கு முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது. பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல என்று நான் உங்களுக்குக் கூறியதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். என்னை அவர்கள் துன்புறுத்தினார்கள் என்றால் உங்களையும் துன்புறுத்துவார்கள். என் வார்த்தையைக் கடைப்பிடித்திருந்தால் தானே உங்கள் வார்த்தையையும் கடைப்பிடிப்பார்கள்!என் பெயரின் பொருட்டு உங்களை இப்படியெல்லாம் நடத்துவார்கள். ஏனெனில் என்னை அனுப்பியவரை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை” என்றார்.

**தியானம்:** இறை இயேசுவின் பணியாளர்களே நாம் செய்கின்ற பணி இயேசுவின் பணியையொத்ததாக இருந்தால் மட்டுமே நாம் இயேசுவின் பணியாளர்கள் எனத் தொடர்ந்து அழைக்கப்படத் தகுதியுள்ளவர்களாக முடியும். அவ்வாறு நாம் உண்மை நெறியை நோக்கி பணிசெய்யும் வேளையில் நமக்காக காத்திருக்கும் சில பரிசில்களைப் பற்றி இறைமகன் இயேசு இன்று நமக்குச் சுட்டிக்காட்டுகின்றார். பணியென்ற பெயர்கொண்ட பல விடங்களில் ஆரத்தியெடுத்து வரவேற்பு, மாலையணிவிப்பு, வாழ்த்து மடல்கள், மண்டபம் நிறைந்த கரகோஷம் இவைகள் அனைத்தும் இவ்வுலகம் கொடுக்கும் பரிசில்கள். நமது பணிக்குப் பலன் அங்கேயே அப்போது கிடைத்து விடுகின்றது. இதுபோன்ற காரியங்களை நாடி நம் பணிப்பயணம் தொடருமாயின், நாம் இயேசுவின் பணியாளர்கள் என அழைக்கப்படத் தகுதியற்றவர்கள். நமக்கு அவனும் வேண்டும், இவனும் வேண்டும் என்ற ரீதியில் வளைந்து கொடுத்து உண்மையை ஊமையாக்கி ஊனமான பணிசெய்வோர்க்கு இவ்வுலகம் தரும் பெருமையான பரிசில்தாம் இவை. மாறாக உண்மைக்குச் சான்று பகர்ந்து, பொய்மையின் மாயாஜால வித்தைகளை தூயஆவியாரின் உதவியினால் அடையாளம் கண்டு, அவற்றைத் துணிவோடு எதிர்கொண்டு செய்கின்ற பணியே இயேசுவின் பணியையொத்த உண்மையான பணி. இதற்குப் பரிசில்களாக இவ்வுலகம் தரும் கேலி, வெறுப்பு, அவமானம் போன்ற பரிசில்களை மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்ள இறைமகன் இயேசு இன்று நமக்கு அழைப்புவிடுக்கின்றார். விண்ணகத்தில் நமக்குக் கிடைக்கவிருக்கும் பரிசையும் அவர் நமக்கு உறுதிசெய்கின்றார்.